தினமணி

**வீணாகும் உணவும் விலைவாசி வீக்கமும்**

ஆர்.எஸ். நாராயணன்

First Published : 25 Jul 2011 01:53:55 AM IST

உலகப் புகழ்பெற்ற இயற்கை விவசாய ஆலோசகரும், ஆசிரியருமான தேவேந்திர சர்மா, ஒருமுறை ஓர் உலகப் பத்திரிகைக்குப் பேட்டி அளித்தபோது, ""இந்தியாவின் விவசாயக் கொள்கையை புதுதில்லி தீர்மானிப்பதில்லை, நியூயார்க் தீர்மானிக்கிறது...'' என்று கூறியது பொய்யல்ல. ஏனெனில், அமெரிக்க அரசு விவசாயத் தொழில்நுட்ப ஒப்பந்த அடிப்படையில் மான்சண்டோவின் பி.ட்டி விதைகளை வாங்க இந்தியா நிர்பந்திக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளை வெளியேற்றிவிட்டு கார்ப்பரேட்டுகளை நியமித்து அமெரிக்க பாணி விவசாயம் - அதாவது உணவுப் பயிர்களைத் தவிர்த்துவிட்டு ஏமாற்றும் மாற்றுப் பயிர்த்திட்டம் என்று காட்டாமணக்கு, கூர்க்கன், விஷவெள்ளரி, சீனிச்சோளம், பீட்ரூட் கிழங்கு, வனில்லா போட்டு ஏற்றுமதி செய்யப் பணிக்கவில்லையா? சரி, இதெல்லாம் போகட்டும். உணவை வீணாக்குவதிலுமா அமெரிக்காவைப் பின்பற்ற வேண்டும். 1950-களில் பார்லாக் கண்டுபிடித்த மெக்சிகன் வெள்ளை என்ற குட்டைரக கோதுமையைச் சாகுபடி செய்து யூரியாவை அள்ளிவிட்டபோது ஆஹா ஓஹோவென்று விளைந்து அமெரிக்காவில் வைக்க இடமில்லாமல் களஞ்சியங்கள் நிரம்பி வழிந்து விலை விழுந்தது.

கோதுமை விலையை உயர்த்த, விளைந்த கோதுமையை அட்லாண்டிக் சமுத்திரத்தில் கொட்டியதுபோக எஞ்சியது, உதவி என்ற பெயரில் பி.எல். 480 அடிப்படையில் இந்தியாவுக்கு வந்தது.

இன்றைய இந்தியாவிலும் களஞ்சியம் நிரம்பி வழிவதன் காரணம், போதிய களஞ்சியங்கள் கட்டப்படாததே. ஆகவே, கொள்முதல் செய்யப்பட்ட கோடி டன்களை மூட்டையாகக் கட்டிச் சதுரமாக அடுக்கி அதன்மீது கறுப்புத் தார்ப்பாய் விரித்துவிட்டால் போதும். மழைபெய்து மூட்டைக்குள் கோதுமை முளைக்கும்; பூஞ்சை பிடிக்கும்; காற்றோட்டம் இல்லாமல் வீணாகும். பின்னர், பொது விநியோகம் செய்ததாகக் கூறிக் குப்பையில் கொட்டப்படும். இப்படிச் செய்வதன் மூலம் விலைவீழ்ச்சியடையாமல் காப்பாற்றலாம்.

கடலைத் தேடிக் கொட்டுவதென்றால் டீசல், பெட்ரோல் செலவு. எந்தச் செலவும் இல்லாமல் கொள்முதல் செய்த இடத்திலேயே வீணாக்கும் நுட்பத்தை ""மன்மோகனாமிக்ஸ்'' எனலாம். அமெரிக்க நிபுணர்கள் வியந்து போற்றினாலும், உச்ச நீதிமன்றம் சும்மா அதன் வேலையைப் பார்க்காமல் மூக்கை நுழைத்து, ""உணவை இப்படி வீணாக்குவதைவிடப் பசியில் வாடும்

ஏழைகளுக்கு இலவசமாக வழங்கலாம்" என்று அரசைக் கண்டித்தபோது பிரதமருக்குக் கோபம் வந்தது.

கடந்த ஆண்டுதான் வீணாக்கப்படும் உணவைப்பற்றிய தகவல் உச்ச நீதிமன்றத்துக்கு வந்துள்ளதுபோலும்! கடந்த 30 ஆண்டுகளாகவே உணவை வீணடிப்பதும் இந்திய உணவுக்கொள்கையின் அம்சமாயிருந்தது. பின்னர்தான் அதுவே ""மன்மோகனாமிக்ஸ்" ஆனது. 80-களில் பல்லாயிரம் டன்கள், 90-களில் சில லட்சம் டன்கள், 2000-க்குப் பின் பல லட்சம் டன்கள், இன்று கோடி டன்களாகக் கொள்முதல் செய்த உணவை வீணாக்குவதன் மூலம் விலை வீழ்ச்சி தடுக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு விலைப் பாதுகாப்பும் வழங்கப்படுகிறது.

கடந்த பத்தாண்டுகளில், நெஞ்சு பொறுக்காத சில எம்.பி.க்கள் வீணாகும் உணவைப் பற்றி வினா எழுப்பும்போது சம்பந்தப்பட்ட அமைச்சர், ""குழு அமைத்து விவாதிக்கும்" என்பார். சைலோஸ் அமைப்பது பற்றியோ, அலுமினியப் பெட்டகங்கள் வாங்குவது பற்றியோ பேசி அது தொடர்பாக குழுவினர் அமெரிக்கா செல்வார்கள்.

""இது ஒரு பிரச்னையா? நாங்கள் கடலில் கொட்டவில்லையா? நீங்கள் ஏன் கங்கையில் கொட்டக்கூடாது?" என்று அமெரிக்காவிலிருந்து கற்று வந்ததைப் பிரதமரிடம் குழு கூறுவதுண்டு.

சீனாவுக்குச் சென்றவர்கள் என்ன சொன்னார்களோ? விண்ணில் ராக்கெட்விடத் தெரிந்த இந்திய விஞ்ஞானிகளுக்கு அலுமினியத்தில் பெட்டகங்கள் செய்யத் தெரியாதா? பாதாளச் சுரங்கம் கட்டி சைலோஸ் உருவாக்க முடியாதா? பல லட்சம் கோடிக்கு ஊழல் செய்யத் தெரிந்த ""மன்மோகனாமிக்ஸ்" அரசுக்குப் பல்லாயிரம் கோடி செலவழித்து உணவைப் பாதுகாக்கப் பெட்டகமோ, சைலோப்ஸ0கூட அமைக்கத் தெரியாதபோது, ""தேசிய உணவுப்பாதுகாப்பு மசோதா சட்டம்" இயற்றப்போவது நல்ல வேடிக்கை.

கொள்முதல் செய்யப்படும் உணவில் ஒரு பகுதி திடலில் கொட்டி வீணானதுபோக எஞ்சுவது உணவு விநியோகத் திட்டத்துக்கு அனுப்பப்படும். அதில் பாதி வெளி அங்காடிக்கு வந்துவிடும். இப்படி ரேஷன் அரிசி வெளி அங்காடிக்கு வருவதன் மூலம் உணவு விலை குறையும் என்பது ""மன்மோகனாமிக்ஸ்" விதி.

பணவீக்கம் எப்போது குறையும்? விலைவாசி எப்போது குறையும்? என்ற கேள்விகள் கடந்த இரண்டாண்டுகளாகத் தினமும் கேட்கப்படுகின்றன. இந்தக் கேள்விகளுக்கு ""மன்மோகனாமிக்ஸ்" நிபுணர்கள், ""இந்த ஆண்டு உணவு உற்பத்தி உயர்ந்துள்ளது. அறுவடை அபரிமிதம். உணவு விலை குறைந்து பணவீக்கம் கட்டுப்படும்..." என்று நவில்வர்.

விலைவாசி உயர்வதால் பணவீக்கம் ஏற்படுகிறதா? பணவீக்கத்தால் விலைவாசி உயர்கிறதா? இதற்கு ஒரு பட்டிமன்றம் போடலாம். விலைவாசி உயர்வதால் பணம் அச்சடிக்கப்படுகிறது. பணப்புழக்கம் கூடுவதால் பொருள்மதிப்பு இழக்கப்பட்டு விலை உயர்கிறது. இதைக் கட்டுப்படுத்தாமல் நீட்டிக்க வைக்கும் ""மன்மோகனாமிக்ஸ்" அகராதியில் ""விலைவாசி வீக்கம்"

என்ற புதிய சொல் தமிழுக்கு ஒரு காணிக்கை. அதுவே, பசியில் உணவு கிடைக்காமல் துடிக்கும் ஏழை இந்தியரின் வயிற்றெரிச்சலும்கூட.

ரிசர்வ் வங்கியிலிருந்து ஓர் அறிக்கை வரும். ஊடகங்களுக்குப் பேட்டி தரும் கவர்னர், "இன்றுள்ள உணவுப்பற்றாக்குறை தீரும்போது பணவீக்கம் கட்டுக்குள் நிற்கும்' என்பார். மீண்டும் நல்ல விளைச்சல் என்று ""மன்மோகனாமிக்ஸ்'', இந்திய விவசாய விஞ்ஞானிகளைப் பாராட்டும்.

"கோதுமை கொள்முதல் 2.80 கோடி டன்களை எட்டி சாதனை'' என்று செய்தி வரும். ஏற்கெனவே கொள்முதல் செய்து இருப்பிலுள்ள உணவால் களஞ்சியங்கள் நிரம்பி வழியும் நிலையில் வெளியில் கொட்டி வீணாகும் பழைய இருப்புடன் புதிய வரவுகள் மூட்டைகளாகக் கட்டப்பட்டு சதுரங்களாக அடுக்கி மேலே ஒரு கறுப்புத் தார்ப்பாய் போட்டு மூடிவைத்து மீண்டும் உணவை வீணாக்கத் திட்டமிடப்படுகிறது.

இன்றைய இந்தியாவில் உணவுப் பற்றாக்குறை இல்லை. களஞ்சியப் பற்றாக்குறைதான். கொள்முதல் செய்யப்படும் உணவைக் காப்பாற்றுவதைவிடக் கெட்டுப்போக அனுமதிப்பதுவே நன்று என்று புதிய பொருளாதாரமான ""மன்மோகனாமிக்ஸ்'' ஆதாரங்களுடன் எடுத்துரைப்பதைக் கவனிக்க வேண்டும். "உனக்கும் பெப்பே உங்கப்பனுக்கும் பெப்பே' என்று பெப்பே காட்டுவதில் வல்லவரான மன்மோகன் சிங், உச்ச நீதிமன்றத்துக்கும் பெப்பே காட்டிக் கொண்டுள்ளார்.

ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் முதல் ஐந்தாண்டு ஆட்சியில் ""மன்மோகனாமிக்ஸ்'' சாதனை, வளர்ச்சி என்று வேலை செய்ததால் மறுபடியும் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டாம் முறை சாதனைகள் வேதனைகளாயின.

முதல் காலகட்டத்தில் நாணயம், நேர்மை என்று பெயரெடுத்து உத்தமராகவும், மாசுமருவற்ற சூரியனாக ஜொலித்த மன்மோகன், களங்கமுள்ள சந்திரனாகிவிட்டார். வளர்ச்சி, போதை இறங்காமல் "பணவீக்கத்துக்கு மருந்து பணவீக்கமே' என்று எண்ணும் அளவில் உற்பத்தித்தன்மையற்ற செலவுகள் தொடர்வதால் மன்மோகனுக்குப் பொருளாதாரம் கற்பித்த கீன்ஸ் இவரை மன்னிக்கவே மாட்டார்.

இந்த நாடு இன்னமும் விவசாயத்தை நம்பியிருப்பதுபோலவும், ஜி.டி.பி வருமானத்தில் விவசாயம் பெரும்பங்கு வகிப்பதுபோலவும் எண்ணி அதே பழைய பல்லவி, ""உணவு உற்பத்தி உயர்ந்தால் விலைவாசி குறையும். பணவீக்கம் கட்டுப்படும்'' என்று கிளிப்பிள்ளை பேசுவதுபோல் ""மன்மோகனாமிக்ஸ்'' நிபுணர்கள் பேசி வருவது வெட்கக்கேடு. பணப்புழக்கம் பல வடிவங்களில் பெருத்து வீங்கி வெடித்து வருகிறதே.

பற்றாக்குறை பட்ஜெட்டால் அரசு அடிக்கும் அசல் பணம் ஒரு பங்கு. உள்நாட்டில் புழங்கும் கறுப்புப் பணம் ஒரு பங்கு. எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் எல்லா வங்கிகளும் வழங்கும் கடன், திரும்பிவராத கடன், திருப்ப முடியாத கடன் - இதற்கும் சேர்த்து அச்சடிக்கப்படும் அசல் பணம்.

"கஜானா காலி, கஜானா காலி...' என்று மாநில அரசுகள் புலம்பினாலும் ரிசர்வ் வங்கி எவ்வளவு வேண்டுமானாலும் கடன் கொடுத்து கஜானாக்களுக்குப் பணம் நிரப்பியவண்ணம் உள்ளன.

முதலீடு, முதலீடு என்று சாலைகளுக்கும், ஆலைகளுக்கும், வன அழிப்புக்கும், சுரங்கம் தோண்டவும், விவசாய நிலத்தைக் கைப்பற்றி ரியல் எஸ்டேட் செய்யவும் பணம் அள்ளிவிடப்படுகிறது.

நொய்டா திட்டம் என்னவோ உ.பி.யில் மட்டுமே நிகழ்வதாக எண்ண வேண்டாம். 2005-ல் எஸ்.ஈ.இசட் சட்டம் என்ற பெயரில் அவசரம் அவசரமாகப் பொருளாதார மண்டலச் சட்டத்தை மத்திய அரசுதானே இயற்றியது? மாநில அரசுகள் செயல்படுத்தி ஒவ்வொரு மாநிலத்திலும் ரியல் எஸ்டேட் மிகுந்துவிட்டது யாரால்?

எலும்பை முறித்தவனே புத்தூர் கட்டுப்போடுவதுபோல் ராகுல் உ.பி.க்கும் ஒரிசாவுக்கும் ஓடிப்போய் விவசாயிகளுடன் காட்சி தந்து பேட்டி எடுப்பது ஊடகங்களுக்கு உற்சாகம் தரலாம். கறுப்புப்பணம் குறையுமா? ரியல் எஸ்டேட் வியாபாரத்தில் புழங்கும் பணஓட்டம் குறையுமா?

""1,000 ரூபாய் நோட்டுகளையும் 500 ரூபாய் நோட்டுகளையும் செல்லாக்காசு ஆக்குங்கள்" என்று ஒரு சாமியார் தரும் யோசனைதான், பணவீக்கம் - விலைவாசிவீக்கம் எல்லாவற்றுக்குமே தக்க மருந்தாக இருக்கும் என்று தோன்றுகிறது. ""மன்மோகனாமிக்ஸ்" திட்டங்களால் ஏறும் விலைவாசிகளுக்கும், வீங்கும் பணத்துக்கும், வீணாகும் உணவுக்கும் யார்தான் மருந்து வழங்கப் போகிறார்கள் என்பது விளங்காத புதிராயுள்ளது.

**மரவள்ளிக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும்**

First Published : 24 Jul 2011 04:21:42 PM IST

ராசிபுரம்,ஜூலை 23: மரவள்ளி கிழங்கிற்கு விலை நிர்யணம் செய்ய வேண்டும் என்று மரவள்ளி கிழங்கு உற்பத்தி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மரவள்ளி கிழங்கு உற்பத்தி செய்யும் விவசாயிகள் சங்க கூட்டம் நாமகிரிப்பேட்டை உழவர்கள் நல வளர்ச்சி மன்றத்தில் அண்மையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தமிழக விவசாயிகள் சங்க துணை பொதுச் செயலாளர் பரமசிவம் தலைமை வகித்தார். தமிழக விவசாயிகள் நல வாரிய சங்க நிர்வாகி துரைசாமி, விவசாயிகள் சங்க இளைஞரணித் தலைவர் முருகேசன், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்க பொது செயலாளர் எஸ்.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழக முதல்வர் தலைமையில் சேகோ சர்வ் அதிகாரிகள், சேகோ பேக்டரி அதிபர்கள், மரவள்ளி விவசாயிகள் ஆகிய முத்தரப்பு கூட்டம் நடத்தி மரவள்ளி கிழங்கிற்கு நிரந்தர விலை நிர்ணயம் செய்ய வேண்டும். மாவுச் சத்து தரம் அறிவதற்கு மின்னணு இயந்திரத்தையே பயன்படுத்த வேண்டும். தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் பள்ளி குழந்தைகளுக்கான செயல்படுத்தப்படும் இலவச சத்துணவு திட்டத்தில் ஜவ்வரிசியை உணவாக சேர்க்க தமிழக அரசு

நடவடிக்கை எடுக்க வேண்டும். ரேஷன் கடைகளில் சத்துமிக்க ஜவ்வரிசியை விற்பதற்கு தமிழக அரசு முன் வர வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**சொட்டு நீர் பாசனம்**

First Published : 23 Jul 2011 03:17:21 PM IST

மா சாகுபடியில் சொட்டுநீர் பாசன முறை மூலம் குறைந்த மின்சாரம், குறைந்த ஆள்பலம், குறைந்த நீர் பயன்பாடு ஆகியவற்றுடன், தேவையான சத்து உரங்களையும் சொட்டுநீர் பாசன குழாய்கள் மூலமே மரக்கன்றுகளின் வேருக்கு நேரடியாக சேர்க்க முடியும் என கே.வி.குப்பம் தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொறுப்பு) எச்.கே. பாண்டே விளக்கம் அளித்தார்.

இத்தகைய தொழில்நுட்ப வசதிகளை தமிழகத்தில் 23 நிறுவனங்கள் அளிக்கின்றன. அத்தகைய நிறுவனங்களில் ஒன்றான ஜெயின் இரிகேஷன் நிறுவன வல்லுநர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று சாதனங்களின் செயல்பாடு குறித்து விளக்கம் அளித்தனர்.

செலவு எவ்வளவு?

மாவில் அடர் நடவு திட்டத்தை செயல்படுத்த 7 ஏக்கருக்கு ரூ.1.37 லட்சம் செலவில் சொட்டுநீர் பாசன வசதியை ஏற்படுத்த முடியும். இதில் ரூ.57 ஆயிரம் அரசு மானியமாக கிடைக்கும்.

குறைந்தபட்சமாக ஒரு ஏக்கருக்கு ரூ.60 ஆயிரம் செலவிட வேண்டும். இதில் 21 ஆயிரம் அரசு மானியம் கிடைக்கும். ஒரு ஹெக்டேர் மா கன்று நடவுக்கு ரூ.74 ஆயிரம் செலவிட வேண்டும். இதில் ரூ.37 ஆயிரம் அரசு மானியம் கிடைக்கும் என தோட்டக் கலை துணை இயக்குநர் ராதாகிருஷ்ணன் விளக்கம் அளித்தார்.

அதிக மகசூல்

அடர் நடவு முறையில் வளர்க்கப்படும் மா மரங்கள் 4 ஆண்டுகளில் பலன் தரத் தொடங்கும். இவற்றின் ஆயுள் 25 முதல் 30 ஆண்டுகள். சராசரியாக தமிழகத்தில் ஹெக்டேருக்கு 5 டன் மகசூல் செய்யப்படுகிறது. புதிய முறையில் 4 மடங்கு மகசூல் கிடைக்கும் என்றனர் அதிகாரிகள்.

குழாய் அடைப்பை நீக்க முடியும்

பொதுவாக சொட்டுநீர் பாசன முறையில், வயலில் பதிக்கப்படும் மெல்லிய குழாய்களில் நீரில் உள்ள அதிக உப்புச் சத்து காரணமாக அடைப்புகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. பொதுவாக நீரில் 2 இ.சி (மின்கடத்தும் தன்மை) அளவுக்கு மேல் உப்புத் தன்மை இருந்தால் சொட்டுநீர் பாசன முறையை பரிந்துரை செய்வதில்லை.

இதற்காக சொட்டுநீர் பாசன அமைப்புகளை நிறுவும் முன்பு தண்ணீரின் கடின தன்மை குறித்து பரிசோதனை செய்யப்படுகிறது.

விவசாயிகள் விரும்பினால் 2 இ.சி.க்கு மேல் உப்புத் தன்மை உள்ள பாசனநீர் கிடைக்கும் இடத்திலும் சொட்டுநீர் பாசனம் செய்ய உதவி புரிகிறோம். இதுபோன்ற இடங்களில் அபரிமிதமான உப்பு படலம் தேங்கி குழாய் அடைப்பு ஏற்படும். 1:2 விகிதத்தில் 8 லிட்டர் தண்ணீருடன் 33 சதவீதம் ஹைடிரோகுளோரிக் ஆசிட் கலந்து சொட்டுநீர் பாசனக் குழாயில் விட வேண்டும். ஒரு நாள் கழித்து இந்த நீரை வெளியேற்றி விட வேண்டும்.

இதன் மூலம் குழாய் அடைப்பு முற்றிலும் நீங்கும் என்றும் அலுவலர்கள் கூறினர்.

புதிய தொழில்நுட்பம்

சொட்டு நீர் பாசன முறையில், பயிருக்கு தேவையான ஊட்டச் சத்து அடங்கிய

உப்பை தனி வாளியில் கரைத்து சொட்டுநீர் பாசன தொழில்நுட்பம் கொண்ட குழாய் வழியாக பயிர்களின் வேருக்கு நேரடியாக அனுப்பும் அமைப்பு குறித்தும் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது.

**நிபந்தனையின்றி பயிர்க் கடன் வழங்க வலியுறுத்தல்**

First Published : 23 Jul 2011 02:41:10 PM IST

தஞ்சாவூர், ஜூலை 22: கூட்டுறவு வங்கிகளில் புதிய உறுப்பினர்களுக்கு நிபந்தனையின்றி பயிர்க் கடன் வழங்க வேண்டும் என விவசாயிகள் குறைகேட்புக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் கா. பாஸ்கரன் தலைமையில் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

எஸ். ராமநாதன்: கடந்த ஆண்டு அறிஞர் அண்ணா கூட்டுறவு சர்க்கரை ஆலை அரவைப் பருவத்தில் ஆள்கள் பற்றாக்குறையால் கரும்பு விவசாயிகளுக்கு கோடிக்கணக்கான ரூபாய் இழப்பு ஏற்பட்டது. நிகழாண்டும் அதுபோல் பாதிப்பு ஏற்படாமல் இருக்க தேவையான கரும்பு அறுவடை இயந்திரங்களை தமிழக அரசு கொள்முதல் செய்ய வேண்டும்.

மதுக்கூர் ஏ.பி. சந்திரன்: மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு 50 நாள்களாகியும், கல்யாணஓடை, தம்பிக்கோட்டை வாய்க்கால்களில் மொத்தம் 8 நாள்கள் மட்டுமே தண்ணீர் வந்துள்ளது. தொடர்ந்து தண்ணீர்விட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அம்மையகரம் ஏ.கே.ஆர். ரவிச்சந்திரன்: அம்மையகரம் கிராமத்திற்கு விநியோகிக்கப்படும் குறைந்த அழுத்த மின்சாரத்தைக் கொண்டு மின் மோட்டார்களை இயக்க முடியவில்லை. அதனால், மின்மாற்றியை பழுதுநீக்கி, வயர்களை மாற்ற வேண்டும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் சாமி. நடராஜன்: திருவிடைமருதூர் வட்டம், மணலூர் திருமாந்துரையில் பழுதான மின்மாற்றியை காலத்தில் சரிசெய்யாததால்,

நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல், கரும்பு பயிர்கள் தண்ணீரின்றி கருகிவிட்டன. தமிழக அரசு இதற்கான இழப்பீடு வழங்க வேண்டும்.

தென்னமநாடு, கரம்பயம் ஊராட்சிகளில் மின்மாற்றி பழுதானதால் பொதுமக்கள் குடிநீர் கிடைக்காமல் திண்டாடுகின்றனர். உடன் மின்மாற்றியை சீர்செய்ய வேண்டும். கல்லணைக்கால்வாயின் கடைமடை வரை தண்ணீர் செல்ல வசதியாக உள்முறை வைக்காமல் அதன் கொள்ளளவு வரை தண்ணீர் எடுக்க வேண்டும்.

ஒரத்தூர் மு. பக்தபிரகலாதன், ஆவாரம்பட்டி வி. முருகானந்தம்: கடந்த ஆண்டு பெய்த தொடர்மழையால் ஒரத்தூர் உள்ளிட்ட பூதலூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் நெற்பழத்தால் பாதிக்கப்பட்டு மகசூல் இழப்பு ஏற்பட்டதால் விவசாயிகள் பெரும் இழப்பைச் சந்தித்தனர். பயிர் காப்பீடு செய்தும் அதற்கான இழப்பீடு கிடைக்கவில்லை. இழப்பீடு கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்க மாவட்டச் செயலர் விமல்நாதன்:

விவசாயிகளுக்கே தெரியாமல், போலி ஆவணங்கள் மூலம் நிலமோசடி, நிலப்பறிப்பு செய்த பத்திரங்களை ரத்து செய்வதற்கு தனிச்சட்டம் இயற்றி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர், திருவையாறு வட்டங்களில் உள்ள தென்னை விவசாயிகள் நலன் கருதி, பாபநாசம் வேளாண் ஒழுங்குமுறைக் கூடத்தில் தேங்காய் கொப்பரை கொள்முதல் நிலையம் தொடங்க வேண்டும்.

நெல் கொள்முதல் நிலையங்களில் முறைகேடுகளைத் தடுக்க வசதியாக மாவட்ட லஞ்ச ஒழிப்பு கண்காணிப்புத் துறை அலுவலர்களின் தொலைபேசி எண்களை விவசாயிகளுக்கு தெரியும்படி ஒட்ட வேண்டும்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் அ. பன்னீர்செல்வம்:

மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. குறுவை, சம்பா சாகுபடியை பாதுகாக்க கர்நாடகத்திடமிருந்து தமிழ்நாட்டுக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரைப் பெற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பேராவூரணி வட்டம் ஆவணத்தில் உள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் கல்விக் கடன் வழங்கும்போது காப்பீட்டுக்கான தொகை கட்டாயம் பிடித்தம் செய்யப்படுவதை நிறுத்த வேண்டும்.

ராயமுண்டான்பட்டி வெ. ஜீவக்குமார்: கல்லணைக்கால்வாயின் தலைமடையான உய்யக்கொண்டான் விரிவாக்க வாய்க்கால், புதிய கட்டளை வாய்க்காலில் இதுவரை சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிடப்படவில்லை. எனவே, உடனடியாக தண்ணீரை திறந்துவிட வேண்டும்.

கூட்டுறவு வங்கிகள் புதிய உறுப்பினர்களுக்கு நகை ஈட்டுக் கடன் மட்டுமே வழங்கி வருகிறது. நகையே இல்லாத விவசாயிகள் மீண்டும் கந்து வட்டிக்காரர்களிடம் சிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. நிபந்தனையின்றி அரசு நிர்ணயித்த ஏக்கருக்கு ரூ. 13,500 பயிர்க் கடன் வழங்க வேண்டும்.

கபிஸ்தலம் வடசருக்கை ஜெயராமன்: திருமண்டங்குடி சர்க்கரை ஆலைக்கு ஒப்பந்தபடி வெட்ட வேண்டிய கரும்புக்கான கட்டிங் ஆர்டர் அளிக்க அங்குள்ள கரும்பு ஆய்வாளர் கட்டாயப்படுத்தி ரூ. 10,000 லஞ்சம் வாங்கிய பின்னரும், கடந்த 18 மாதங்களாக வெட்டப்படாமல் காய்ந்துபோன கரும்புக்கான தொகையை வசூலித்துத் தர வேண்டும் என்றார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சீ. சுரேஷ்குமார், மின் வாரிய மேற்பார்வை பொறியாளர் தங்கராஜ், பொதுப் பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர் ரவிச்சந்திரன், கூட்டுறவு வங்கிகளின் இணைப் பதிவாளர் அந்தோணி பீட்டர், நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் பிச்சை உள்ளிட்ட அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

**விவசாயிகளுக்கு கடனுதவி**

First Published : 23 Jul 2011 02:13:12 PM IST

அரியலூர், ஜூலை 22: பேங்க் ஆப் இந்தியாவின் அரியலூர் கிளை சார்பில், விவசாயிகளுக்கு கடனுதவிகள் வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவுக்கு வங்கியின் தஞ்சை மண்டல கடன் வளர்ச்சி மையப் பொறுப்பாளர் பழனியாண்டவர் தலைமை வகித்தார். சுண்டக்குடி ஊராட்சித் தலைவர் விசுவநாதன், ராஜாராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் அரியலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் ஜெ. பெல்லா பங்கேற்று, 15 விவசாயிகளுக்கு தலா ரூ. 20,000 வீதம் கறவை மாடு வாங்க ரூ. 3 லட்சம், தலா ரூ. 50,000 வீதம் 3 பேருக்கு ரூ. 1.5 லட்சத்தில் மாட்டுக் கடன், டயர்வண்டி வாங்குவதற்கான கடனுதவி, அரியலூரைச் சேர்ந்த பொறியியல் கல்லூரி மாணவர் ஷாகுல் அமீதுக்கு கல்விக் கடனாக ரூ. 3.5 லட்சம் ஆகியவற்றை வழங்கினார்.

விழாவில் பன்னீர்செல்வம், சுரேஷ்குமார், கருணாகரன், ராமச்சந்திரன், மணிமொழி, உழவர்சந்தை அலுவலர் தமிழ்ச்செல்வன், அப்துல் ரகுமான், டாக்டர் அன்பரசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விழா ஏற்பாடுகளை இலக்கியச் செல்வி, செந்தில்நாதன் உள்ளிட்டோர் செய்திருந்தனர். முன்னதாக, கிளை மேலாளர் பரமசிவம் வரவேற்றார். காசாளர் சிவபெருமாள் நன்றி கூறினார்.

தினமலர்

**ஜப்பானில் தேவை அதிகரிப்பால் இந்தியாவின் இறால், மீன் ஏற்றுமதி சூடுபிடித்தது**

ஜூலை 25,2011,04:21



கொச்சி:நடப்பாண்டு, சென்ற ஏப்ரல்- மே மாதங்களில் மந்தமாகக் காணப்பட்ட இந்திய கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. சுனாமியின் தாக்கத்திலிருந்து மீண்டுள்ள ஜப்பானில், மீன், இறால் உள்ளிட்ட உணவு வகைகளுக்கான தேவை அதிகரித்துள்ளதால், ஏற்றுமதி உயர்ந்துள்ளதாக இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். இந்தியாவில் இருந்து பல ஆண்டுகளுக்கும் மேலாக, கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியாகிவருகின்றன. 1953ம் ஆண்டு கொச்சின் கம்பெனி என்றநிறுவனத்தின் உரிமையாளரான மாதவன் நாயர், முதன் முதலாக உறைய வைக்கப்பட்ட இறால்களை, கொச்சி துறைமுகத்தில் இருந்து ஏற்றுமதி செய்தார். தொடக்கத்தில், டின்னில் அடைக்கப்பட்ட இறால்களே ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. பின்னர், இவ்வகை ஏற்றுமதிக்குத் தேவையான டின்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டதால், உறைய வைக்கப்பட்ட இறால்களின் ஏற்றுமதிக்குமுக்கியத்துவம் அளிக்கப்பட்டது. 1960களின் இறுதியில் பலதரப்பட்ட மீன் வகைகளின் ஏற்றுமதி தொடங்கியது. எனினும் இன்றுவரை, இந்தியாவின் கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதியில், இறால்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்திய கடல் உணவுப் பொருட்களின் மிகப் பெரிய சந்தையாக, ஜப்பான் பல ஆண்டுகளாக விளங்கியது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, இந்திய கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதிக்கான பிரதான சந்தை, என்ற சிறப்பைஅமெரிக்கா பெற்றுள்ளது.இந்திய கடல் உணவுப் பொருட்களின் சந்தை மதிப்பு, ஆண்டுக்கு 25ஆயிரம் கோடி ரூபாய் என்ற அளவில் உள்ளது. இதில், ஏற்றுமதியின் பங்களிப்பு 7,000 கோடி ரூபாய்க்கும் அதிகமாக உள்ளது. இதில், இறால் ஏற்றுமதி 50 சதவீதமாக உள்ளது. இவ்வாண்டு தொடக்கத்தில், ஜப்பானில் ஏற்பட்ட "சுனாமிமற்றும் அணு உலைக் கசிவு அபாயம் காரணமாக, அந்நாட் டிற்கான கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, இரண்டு மூன்று மாதங்களுக்கு மேலாக பாதிக்கப்பட்டது. குறிப்பாக, சென்ற ஏப்ரல் - மே மாதங்களில் இந்திய கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மிகவும் மந்தமாக இருந்தது. இந்நிலை

யில், தற்போது ஜப்பான், இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதால், அந்நாட்டில் இந்திய மீன், இறால்களுக்கான தேவை அதிகரித் துள்ளது. அது போன்று, அமெரிக்காவிலும் இந்திய இறால்களுக்கான தேவைஅதிகரித்துள்ளது. பொருளாதார நெருக்கடியால் பாதிக் கப்பட்டிருந்த அமெரிக்க கடல் உணவுப் பொருட்கள் சந்தை, கடந்த ஆண்டு இறுதியில் இருந்து விறுவிறுப்படைந்துள் ளது.இதையடுத்து, இந்திய இறால்களுக்கான தேவை அதிகரித்துள்ளது. அமெரிக்காவில், இந்திய இறால்கள் மீது பொருள் குவிப்பு வரி விதிக்கப்பட்டுள்ளது.எனினும், இந்திய இறால்களுக்கு நல்ல விலை கிடைப்ப தால், இந்த வரியால் பாதிப்பு ஏதுமில்லை என்று ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர். ஐரோப்பாவை பொறுத்தவரை, கடல் உணவுப் பொருட்களுக்கான ஏற்றுமதி பருவம் இன்னும் தொடங்கவில்லை. ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதியில், ஆக்டோபஸ், சிப்பி மீன் உள்ளிட்ட வகைகள் அதிக அளவில் இடம்பெறும். ஆகஸ்ட் மாதம் தொடங்க உள்ளஏற்றுமதி பருவத்தில், இந்திய கடல் உணவுகளுக்கான தேவை அதிக அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற ஏப்ரல் மாதம், நாட்டின் கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி, 53 ஆயிரத்து 458 டன் என்ற அளவில் இருந்தது. இது, சென்ற ஆண்டு, இதே மாதத்தில், 54 ஆயிரத்து 929 டன் என்ற அளவில் உயர்ந்திருந்தது. இதே காலங்களில், ஏற்றுமதி மதிப்பும் 798 கோடி ரூபாயில் இருந்து 758 கோடி ரூபாயாக சரிவடைந்தது.பருவ நிலை சாதகமாக உள்ளதாலும், மீன் பிடி பகுதிகளில் நல்ல அளவில்மீன்கள் கிடைப்பதாலும், இதன் ஏற்றுமதி வரும் மாதங்களில் அதிகரிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இறால் வளர்ப்பு பண்ணைகள் பெருகி வருவதாலும், கடல் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் மையங்கள்அதிகரித்து வருவதாலும், ஏற்றுமதி வரும் ஆண்டுகளில் மேலும் வளர்ச்சி காணும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**விற்பனையில் மந்தநிலை; ரூ.2.65 கோடி தேயிலை தேக்கம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,01:15 IST

குன்னூர் : வர்த்தகத்தில் ஏற்பட்ட மந்த நிலையால், குன்னூரில் 2.65 கோடி ரூபாய் மதிப்புள்ள தேயிலை தூள் தேக்கம் அடைந்துள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் தேயிலை தூள், குன்னூர் ஏல மையம் மூலம் வாரந்தோறும் விற்கப்படுகிறது. இந்த வாரம் 16.71 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 11.33 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 5.38 லட்சம் கிலோ அடங்கும். உள்நாடு மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஏற்பட்ட மந்தநிலையால், ஏலம் களைகட்டவில்லை. பாகிஸ்தான், ரஷ்ய வர்த்தகர்கள் மட்டும் குறைந்தளவு தேயிலை தூள் வாங்கினர்; ஆப்பிரிக்க, ஐரோப்பிய நாடுகளின் வர்த்தகர்கள் பங்கேற்கவில்லை. உள்நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பும் சுமாராக இருந்ததால், விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 2.65

கோடி ரூபாய் மதிப்புள்ள 28 சதவீத தேயிலை தூள் தேங்கியது. ஏலத்தில் போட்டி இல்லாத காரணத்தால், அனைத்து ரக தூளின் விலையும் கிலோவுக்கு 3 ரூபாய் விலை குறைந்தது; ஒரு கிலோ தேயிலை தூளின் சராசரி விலை 57.42 ரூபாயாக இருந்தது.

சிடிசி ரக தூளில், அதிகபட்சம் கிலோவுக்கு 149 ரூபாய் விலை கிடைத்தது. 60க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. ஆர்த்தடாக்ஸ் ரகத்தில் அதிகபட்சம் கிலோவுக்கு 189 ரூபாய் விலை கிடைத்தது. 20க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. இலை ரகத்தில் சாதாரண ரக தூளுக்கு 38 - 40 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 80-130 ரூபாய், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரக தூளுக்கு 39-45 ரூபாய், சிறந்த ரக தூளுக்கு 85-140 ரூபாய் விலை கிடைத்தது. அடுத்த ஏலம் வரும் 28,29 தேதிகளில் நடத்தப்படவுள்ளது. மொத்தம் 17.60 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு உள்ளது.

**பண்ணை குட்டைக்கு ரூ. 45 ஆயிரம் மான்யம்: வேளாண் துறை அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,01:50 IST

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு மற்றும் தனியார் நிலங்களில் பண்ணை குட்டைகள் அமைக்க முன்வரும் விவசாயிகளுக்கு 45 ஆயிரம் ரூபாய் மான்யம் வழங்க வேளாண் பொறியியல் துறை தயாராக உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. .

புதுக்கோட்டை வேளாண் பொறியியல் துறை அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில் மழை நீரை சேமித்து வேளா ண் சார்ந்த தொழில்கள் மூலம் விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் விதமாக வேளாண் பொறியியல் துறையின் சார்பில் பண்ணை குட்டைகள் அமைக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவை விவசாயிகளுக்கு மழைநீரை சேமித்து விவசாயப் பணிகளுக் கு பயன்படுத்தவும், மீன் வளர்க்கவும் வாய்ப்பாக அமையும்.

பண்ணை குட்டை அமைக்க ஆயிரத்து 225 சதுர மீட்டர் இடம் இருந்தால் போதுமானது. தரைமட்டத்துக்கு கீழ் ஐந்து அடி ஆழம் 100 அடி அகலம், 100 அடி நீளம் கொண்டதாக அமைக்கவேண்டும். இதற்கான மொத்தச் செலவு ரூ.50 ஆயிரம். இதில் விவசாயிகளின் பங்களிப்பு வெறும் ஐந்தாயிரம் ரூபாய். மீதமுள்ள 45 ஆயிரம் ரூபாய் அரசு மானியமாக வழங்கப்படும். விவசாயிகள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

பண்ணை குட்டை அமைக்க விரும்புவோர் விண்ணப்பத்துடன் நிலத்துக்குண்டான சிட்டா, அடங்கல், வரைபடம், ரேஷன்கார்டு ஆகியவற்றின் நகலை இணைத்து புதுக்கோட்டை மற்றும் அறந்தாங்கி வேளாண் பொறியியல் துறை அலுவலகத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

**கரும்பு பயிருக்கு மாறிய தியாகதுருகம் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,00:35 IST

தியாகதுருகம் : மக்காச்சோளம் சாகுபடி மீது இருந்த ஆர்வம் விவசாயிகளிடம் குறைந்ததால் அதனை பயிரிடும் பரப்பு தியாகதுருகம் பகுதியில் வெகுவாக குறைந்துள்ளது. தியாகதுருகம் பகுதியில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன் மக்காச்சோளம் சாகுபடி திடீரென பிரபலம் ஆனது. சராசரி மழையளவு குறைந்ததாலும், கரும்புக்கு எதிர்பார்த்த விலை கிடைக்காததாலும் மக்காச்சோளம் சாகுபடி செய்து லாபம் ஈட்டுவதில் விவசாயிகள் கவனம் செலுத்தினர். இது விவசாயிகளுக்கு நல்ல பலனை பெற்றுத் தந்ததால் குறுகிய காலத்தில் விவசாயிகளிடம் பெரும் வரவேற்பை பெற்றது.

இதனால் தியாகதுருகம் பகுதியில் கடந்த 2 ஆண்டுக்கு முன் திரும் பிய பக்கம் எல்லாம் மக்காச்சோளம் பயிர் செழித்து வளர்ந்து பச்சை பசேல் என்று காட்சியளித்தது. மானாவாரியிலும் மக்காச்சோளம் சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வந்தனர். கோழித்தீவனம் தயாரிப்புக்கு மக்காச்சோளம் முக்கிய மூலப்பொருளாக பயன்படுவதால் நல்ல விலை கொடுத்து வியாபாரிகள் வாங்கி சென் றனர். ஒரே நேரத்தில் பலரும் மக்காச்சோளம் சாகுபடியில் ஈடுபட்டதால் நாளடைவில் எதிர்பார்த்த விலை கிடைக்காமல் போனது.

போதிய ஊட்டச்சத்து உரங்களை போடாமல் மானாவாரி நிலங்களில் தொடர்ந்து மக்காச்சோளம் பயிரிட்டதாலும் போதிய சத்துக்கள் கிடைக்காமல் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் மக்காசோளம் மீது இருந்த மோகம் விவசாயிகளுக்கு குறையத் துவங்கியது. அதே நேரத்தில் கரும்பு சாகுபடி நல்ல பலனை கொடுக்க துவங்கியதால் நன்செய் பயிராக மக்காச்சோளம் பயிரிடுவதை பலரும் தவிர்த்து கரும்பு பயிருக்கு மாறியுள்ளனர். கடந்த இரு ஆண்டுகளுக்கு முன் பல ஆயிரம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட மக்காச்சோளம் இன்று சில நூறு ஏக்கர் பரப்பில் மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது

**மரவள்ளி கிழங்குக்கு நிரந்தர விலை நிர்ணயம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,00:51 IST

ராசிபுரம்: "மரவள்ளி கிழங்குக்கு நிரந்தரமாக விலை நிர்யணம் செய்ய வேண்டும்' என, ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மரவள்ளி கிழங்கு உற்பத்தி செய்யும்

விவசாயிகள், சங்க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம், ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டையில் நடந்தது.
தமிழக விவசாயிகள் சங்க துணை பொதுச் செயலாளர் பரமசிவம் தலைமை வகித்தார்.
விவசாயிகள் நல வாரிய சங்க நிர்வாகி துரைசாமி, இளைஞரணித் தலைவர் முருகேசன், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச்சங்க பொதுச் செயலாளர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், தமிழக முதல்வர் தலைமையில் ஒரு முத்தரப்பு கூட்டம் நடத்தி, மரவள்ளி கிழங்குக்கு நிரந்தர விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அந்த விலை நிர்யணத்தின் போது, சேகோ சர்வ் அதிகாரிகள், சேகோ ஃபேக்டரி அதிபர்கள், மரவள்ளி விவசாயிகள் ஆகிய மூவர் முன்னிலையிலும் விலை நிர்யணம் செய்ய வேண்டும். தற்போது, மரவள்ளி கிழங்கில் மாவுச்சத்து அறியும்போது, 28 பாயிண்டுக்கு மேல் விலை கொடுப்பதில்லை. மாவுச்சத்து தரம் அறியும் போது, மாவுச் சத்து பாயிண்ட்கள் அனைத்துக்கும் விலை வழங்க வேண்டும். மாவுச்சத்து தரம் அறிவதற்கு மின்னணு இயந்திரத்தையே பயன்படுத்த வேண்டும். தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும், பள்ளி குழந்தைகளுக்கான செயல்படுத்தப்படும் இலவச சத்துணவு திட்டத்தில், ஜவ்வரிசியை உணவாக சேர்க்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். ரேஷன் கடைகளில் சத்துமிக்க ஜவ்வரிசியை விற்பதற்கு, தமிழக அரசு முன்வர வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**உரங்கள் மீதான செயற்கை தட்டுப்பாடு கண்காணிப்பு :பள்ளி விழாவில் வேளாண் அமைச்சர் தகவல்**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,00:46 IST

கோபிசெட்டிபாளையம்: எஸ்.எஸ்.எல்.சி., பொதுத்தேர்வில் கோபி ஸ்ரீகுருகுலம் பள்ளி மாணவி ரம்யா 496 மார்க் பெற்று மாநிலத்தில் முதலிடமும், 494 மார்க் பெற்று மாணவிகள் ஹரிபிரபா, சோபனா ஆகியோர் மூன்றாமிடமும், பிளஸ் 2 தேர்வில் முதல் மார்க் பெற்ற மாணவர்கள், சாதனைக்கு பாடுபட்ட ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா பள்ளியில் நடந்தது.
பரிசுகள் வழங்கி, வேளாண் துறை அமைச்சர் செங்கோட்டையன் பேசியதாவது: குருகுலம் என்ற பெயருக்கேற்ப, ஒழுக்கம், கட்டுப்பாடு, பண்பாடு, கலை, கலாச்சாரத்தில் மட்டுமின்றி இப்பள்ளி படிப்பிலும் மாநில அளவில் சாதனை புரிந்துள்ளது. கிராமப்புறத்தில் உள்ள குருகுலம் பள்ளி எஸ்.எஸ்.எல்.சி., தேர்வில் முதலிடம் பெற்றது பாராட்டுக்குரியது.

இக்கல்வி நிறுவனத்தின் உழைப்பும், மாணவர்களின் கல்வி மீது காட்டும் அக்கரை இதன் மூலம் தெரிய வருகிறது. இப்பள்ளி எதிர்காலத்தில் கல்லூரியாக மாற வேண்டும். வேளாண்மைத்துறை மாநாட்டில் சமீபத்தில் பேசிய பிரதமர், "சுதந்திரம் அடைந்தபோது நாட்டின் மக்கள் தொகை 37 கோடி. தற்போது, 122 கோடி. மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு, தானிய உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். நாட்டில் பத்து சதவீத விளை நிலங்கள் மனைகளாகிவிட்டது. 2020ல் உணவு பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது, என பிரதமர் கவலை தெரிவித்துள்ளார்.
முதல்வர் ஜெயலலிதா, தமிழகத்தில் உணவு உற்பத்தியை அதிகரிக்கும் எண்ணத்தில் வேளாண் துறையை மேம்படுத்த பல திட்டங்களை வகுத்துள்ளார். பதவியேற்றதும், டி.ஏ.பி., யூரியா போன்ற உரங்கள் தட்டுப்பாடு உள்ளதாகவும், அதை போக்க பிரதமருக்கு முதன்முதலில் கடிதம் எழுதினார். டி.ஏ.ஓ., பொட்டாஷ் போன்ற உரங்கள் தயாரிப்புக்கான மூலப்பொருட்கள் ஆப்பிரிக்கா மற்றும் அரபுநாடுகளில் இருந்து இறக்குமதி செய்கின்றனர். உர உற்பத்தியாளர்கள் செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, உரங்களின் விலையை உயர்த்தும் நிலையை அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது. இவ்வாறு அவர் பேசினார். குருகுலம் பள்ளி முதல்வர் ரெங்கராஜ் வரவேற்றார். கலெக்டர் காமராஜ், எம்.எல்.ஏ.,க்கள் ரமணிதரன், வெங்கடாசலம், நாராயணன், முதன்மை கல்வி அலுவலர் குமார், கோபி மாவட்ட கல்வி அலுவலர் மணியம்மாள், ஆர்.டி.ஓ., மீனாபிரியதர்ஷினி போன்றோர் பங்கேற்றனர். பள்ளி செயலாளர் செல்வம் நன்றி கூறினார்

**பருத்தி வரத்து உயர்வு ரூ. 2.50 கோடிக்கு ஏலம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,00:46 IST

கோபிசெட்டிபாளையம்: ஈரோடு மாவட்டத்தில் அந்தியூர், பூதப்பாடி, அம்மாபேட்டை, சேலம் மாவட்டம் கொளத்தூர், இடைப்பாடி, கண்ணாமூச்சி, நாமக்கல் மாவட்டம் கொங்கணாபுரம், தேவூர் மற்றும் தர்மபுரி மாவட்டத்தில் பருவ பருத்தி அறுவடை துவங்கியுள்ளது. இங்கு உற்பத்தியாகும் பருத்தி அம்மாபேட்டை மற்றும் பூதப்பாடி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்துக்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. சென்ற மூன்று வாரமாக பருத்தி ஏலம் துவங்கி நடக்கிறது. சென்ற வாரம் 12 ஆயிரம் மூட்டை பருத்தி வரத்து இருந்தது. நடப்பு வாரம் பருத்தி வரத்து மேலும் கூடி, 15 ஆயிரம் மூட்டை விற்பனைக்கு வந்தது. ரகம் வாரியாக பருத்தி பிரித்து ஏலம் நடந்தது.

"பிடி' ரகம் குவிண்டால் அதிகபட்சம் 3,900 ரூபாய், குறைந்தபட்சம் 3,500 ரூபாய்க்கு விற்றது. "சுரபி' ரகம் அதிகபட்சம் 4,400 ரூபாய், குறைந்தபட்சம் 3,900 ரூபாய்க்கு விற்றது. சென்ற வாரத்தை விட கிலோவுக்கு இரண்டு ரூபாய் விலை குறைந்தது. தமிழகத்தில் பல்வேறு பகுதியில் இருந்தும் வியாபாரிகள் ஏலத்தில் பங்கேற்று, பருத்தி கொள்முதல் செய்தனர். இரு தினங்களில்

நடந்த ஏலத்தில் 2.50 கோடி ரூபாய்க்கு பருத்தி வர்த்தகம் நடந்தது.
ஏலத்துக்கான ஏற்பாடுகளை பூதப்பாடி ஒழுங்கு முறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் அந்தோணி ஜோசப் செய்திருந்தார்.

**விவசாயிகளுக்கு விதை வினியோகம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,01:55 IST

மேட்டுப்பாளையம் : தோட்டக் கலைத்துறை சார்பில், விவசாயிகளுக்கு காய்கறி மற்றும் கீரை வகை விதை பாக்கெட்டுகள் வழங்கப்பட்டன.மேட்டுப்பாளையம் ஊமப்பாளையத்தில் நடந்த மனுநீதி நாள் முகாமில், காரமடை வட்டார தோட்டக் கலைத்துறை சார்பில், ஸ்டால் அமைக்கப்பட்டிருந்தது. இதை மாவட்ட வருவாய் அலுவலர் கற்பகம் திறந்து வைத்தார். தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் வசந்தி வரவேற்றார். ஆடிப் பட்டத்தில் விதைக்க வேண்டிய காய்கறி, கீரை விதை பாக்கெட்டுகளை 50 விவசாயிகளுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தோட் டக்கலைத்துறை துணை அலுவலர் பழனிசாமி, உதவி வேளாண் அலுவலர்கள் ரவி, சண்முகம், தேவன், சேகர் உட்பட பலர் பங்கேற்றனர்.
**தானிய அபிவிருத்தி திட்டத்திற்காக ரூ. 3.75 லட்சம் அரசு நிதி ஒதுக்கீடு**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,00:19 IST

உளுந்தூர்பேட்டை : ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் திருநாவலூர் வட்டத்தில் 3.75 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் ரவீந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: வேளாண் விரிவாக்க மையங்களில் ஏடிடி-39, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, சம்பா மசூரி, ஏடிடி-37 ரகங்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. அவைகள் ஒரு விவசாயிக்கு 50 கிலோ வீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. நெல் பயிரில் கூடுதல் மகசூல் பெறுவதற்காக நுண்ணுயிர் பொட்டலங்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இடுபொருட்களை பெற வரும் விவசாயிகள், சம்மந்தப்பட்ட உதவி வேளாண் அலுவலர்களின் பரிந்துரை விண்ணப்பத்தை பெற்று வர வேண்டும். நேரடியாக வேளாண் விரிவாக்க மையத்திற்கு வரும் விவசாயிகள், இருப்பிட சான்று(குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை), நிலச் சான்று(சிட்டா, அடங்கல், பட்டா) போன்றவற்றை எடுத்து வர வேண்டும். விவசாய அடையாள அட்டை கொண்டு வந்தும், இடுபொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.

**ஆற்றை தூர்வாரி சீரமைத்த விவசாயிகள் நீரை சேமிக்க தடுப்பணை கட்டப்படுமா?**

பதிவு செய்த நாள் : ஜூலை 25,2011,00:29 IST

திருவெண்ணெய் நல்லூர் : விவசாயிகள் தூர்வாரி சீரமைத்த மலட்டாற்றின் குறுக்கே அரசு தடுப்பணை கட்டினால் நீர்மட்டம் மேலும் உயர வாய்ப்புள்ளது. சமூகஆர்வலர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆற்றின் பல்வேறு இடங்களில் தடுப்பணை அமைத்து நிலத்தடி நீர் மட்டம் உயர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
திருக்கோவிலூர் பெண்ணையாற்றிலிருந்து கோரையாறு பிரிந்து மீண்டும் ஏனாதிமங்கலத்தில் கலக்கிறது. இதேப்போல் திருவெண்ணெய்நல்லூர் அடுத்த டி.எடையார் கோரையாற்றிலிருந்து மலட்டாறு பிரிந்து கடலூர் மாவட்டம் திருவந்திபுரம் கெடிலம் நதியில் கலந்து கடலில் கலக்கிறது. நீர்வரத்து அதிகம் இல்லாத இந்த ஆற்றில் கடந்த 1972ம் ஆண்டு ஏற்பட்ட கடுமையான வெள் ளப் பெருக்கின்போது ஆங்காங்கே மணல்திட்டுக்கள் ஏற்பட்டு நீர்வரத்து முற்றிலும் தடைபட்டது.

இதில் நீர்வரத்தை ஏற்படுத்தினால் விவசாயத்திற்கு நன்மை கிடைக்கும் என கருதிய விவசாயிகள் ஆலோசனை நடத்தினர். இவர்கள் ஒன்றிணைந்து கடந்த 1993ம் ஆண்டு "ஜீவநதி மலட்டாறு நிலத்தடி நீர் மேம்பாட்டு எழுச்சிக்கூடல்' என்ற அமைப்பை துவக்கி ஆற்றை தூர்வாரும் பணியை மேற்கொண்டனர். அப்போது பொருளாதார வசதி குறைவானதால் இப்பணியில் தொய்வு ஏற்பட்டது. இதையடுத்து 1997ம் ஆண்டு அப்போதைய கலெக்டர் பிரவீண்குமார் அண்ணாமறுமலர்ச்சி திட்டத்தில் 10 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்தார். இதைப் பயன்படுத்தி அரசூரிலிருந்து காரப்பட்டு வரையில் ஒன்னரை கி.மீ., தூரத்திற்கு ஆறு தூர் வாரப்பட்டது. மீதமுள்ள பகுதியில் ஆற்றை தூர் எடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும் பணியில் தொய்வு ஏற்பட்டதை தொடர்ந்து ஜீவநதி அமைப்பின் தலைவராக சேமங்கலத்தை சேர்ந்த தட்சணாமூர்த்தி தேர்வு செய்யப்பட்டார். இவரின் முயற்சியாலும், நெல்லிக்குப்பம் முன்னாள் எம்.எல்.ஏ., சபாராஜேந்திரன், பாரி சர்க்கரை ஆலை மற்றும் விவசாயிகளின் பங்களிப்போடு பல லட்சம் ரூபாய் செலவுகள் செய்து தற்போது கடலூர் மாவட்டம் கட்டமுத்துப்பாளையம் வரை ஆற்றை தூர்வாரி நீர்வரத்திற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆற்றில் நீர்வருவதற்கு மழை வேண்டி ஆண்டுதோறும் அரசூர் மலட்டாற்றில் வருணபூஜையை நடத்துகின்றனர்.

இந்த ஆற்றில் தற்போது 100 முதல் 300 அடி வரை மணல்பாங்கு அதிகம் இருப்பதால் நீர்வரத்து காலங்களில் 100க்கும் மேற்பட்ட கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதாகவும், ஜீவநதி அமைப்பின் முயற்சியால் 1997ம் ஆண்டு 190 அடியாக இருந்த நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து

கடந்த 2010ம் ஆண்டில் 50 அடியாக உயர்ந்துள்ளதாகவும் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். அதிர்ஷ்டவசமாக மணல் அதிகம் உள்ள மலட்டாறு வனத்துறையின் கட்டுப்பாட்டில் வந்ததால் மணல் அப்படியே இருக்கிறது. இந்த மணலையும் விற்பனைக்கு விட்டிருந்தால் நிச்சயம் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் எனவும் விவ சாயிகள் தெரிவித்தனர்.

ஒருபுறம் பெண்ணையாற்றின் படுகைகளில் ஏராளமான இடங்களில் மணல் எடுத்து வருகின்றனர். மணல் குறைந்துவிட்டதால் பெண்ணையாற்றில் வரும் நீர் நேராக கடலில் கலக்கிறது. இதனால் அப்பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துவிட்டது. மலட்டாற்றில் நீர்வரத்து ஏற்படும்போது இங்குள்ள மணலால் பெண்ணையாற்று பகுதி விவசாயிகளுக்கும் நீர்மட்டம் உயருவதற்கு வாய்ப்பாக அமைகிறது. விழுப்புரம் மாவட்டம் டி.எடையார் முதல் கடலூர் மாவட்டம் வரிஞ்சிப்பாக்கம் வரை 41 கி.மீ., தூரத்திற்கு மலட்டாற்றின் குறுக்கே எங்கும் தடுப்பணைகள் இல்லாததால் தண்ணீர் வீணாக கடலில் கலக்கிறது.

ஊர்கூடி தேர் இழுப்பதைப்போல், விவசாயிகள் ஒன்றிணைந்து நீர்வரத்தே இல்லாத ஆற்றை தூர்வாரி நீர்வரத்திற்கும் ஏற்பாடு செய்துள்ளனர். மலட்டாற்றின் குறுக்கே பல இடங்களில் தடுப்பணை கட்டிக்கொடுத்தால் நீர்மட்டம் உயர வாய்ப்புள்ளதாக இந்த அமைப்பினர் கடந்த தி.மு.க., அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் விவசாயிகள் தாங்களே முன்வந்து ஆற்றை தூர்வாரி நீர்வரத்தே இல்லாத ஆற்றில் நீர்வரத்திற்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர். இவர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆற்றின் பல்வேறு இடங்களில் தடுப்பணை கட்டிக்கொடுத்தால் நிலத்தடி நீர் மட்டம் மேலும் உயர வாய்ப்புள்ளது. புதியதாக பொறுப்பேற்றுள்ள அ.தி.மு.க., அரசு நடவடிக்கை எடுக்கிறதா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**மா சாகுபடியில் 3 மடங்கு வருவாய் பெற யோசனை**

பதிவு செய்த நாள் : ஜுலை 24,2011,23:49 IST

மதுரை : ""மா சாகுபடியில் அதிக மகசூலை பெற அதிக இடைவெளி விட்டு நடுவதை தவிர்த்து, அடர் நடவு முறையை பின்பற்றினால் மும்மடங்கு வருவாய் பெறலாம்,'' என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ், மா மரக் கன்றுகளை அடர் நடவு முறையில் 5 மீ.,க்கு 5 மீ., இடைவெளியில் ஒட்டு கன்றுகளை நடவு செய்ய வேண்டும். சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழி உரமிட அரசு மானியம் வழங்கப்படுகிறது. சரியான கிளை

படர்வு மேலாண்மையை பின்பற்றுவது நல்லது. மா சாகுபடியில் கவாத்து, பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் அறுவடை காலங்களில் இடைப்பணி செய்வது எளிதாக்கப்படுகிறது. மதுரை மாவட்டத்தில் அடர் நடவு முறையை நடப்பு ஆண்டில் 400 எக்டேர் மா பயிர் பரப்பு விரிவாக்கத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, விவசாயிகள் தேர்வு நடந்து வருகிறது. முதன்முதலாக கொய்யாவில் அடர் நடவு முறையை 10 எக்டேர் பரப்பில் செயல்படுத்தவும் முனைப்புடன் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. விவசாயிகள் மா மற்றும் கொய்யா அடர் நடவு சாகுபடி தொழில்நுட்பங்கள், ஆலோசனைகள் பெற வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் மற்றும் அலுவலர்கள் அல்லது துணை இயக்குனர் அலுவலகத்தை அணுகலாம், என துணை இயக்குனர் விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கு விதைகள் தயாரிக்கும் பயிற்சி முகாம்**

பதிவு செய்த நாள் : ஜூலை 24,2011,23:49 IST

திருப்பரங்குன்றம் : திருப்பரங்குன்றம் தாலுகாவில் விதை கிராம திட்டத்தின்கீழ், சோளங்குருணி, வலையங்குளம், சின்ன உடைப்பில், விதைகள் தயாரிக்கும் பயிற்சி முகாம்கள் நடக்கின்றன. அடுத்த பருவத்திற்கான நிலக்கடை விதை தயாரிக்கும் பயிற்சி ஜூலை 26ல் சோளங்குருணியிலும், பயறு வகைகளுக்கான பயிற்சி ஜூலை 27ல் சின்ன உடைப்பிலும், ஜூலை 28ல் வலையங்குளம் சமுதாய கூடத்திலும் நடக்கின்றன. விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம். விபரங்களுக்கு விவசாய உதவி இயக்குநர் செல்வன்(94439 30379), துணை அலுவலர் கோவிந்தராஜ்(90039 67594)ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். நெல் விதைகள் தயாரிக்கும் பயிற்சி திருப்பரங்குன்றத்தில் நடக்கிறது. இடம் மற்றும் தேதி பின் அறிவிக்கப்படும், என உதவி இயக்குனர் செல்வன் தெரிவித்தார்.

**பயிர் காப்பீட்டு திட்டத்தில் பிரிமிய விகிதம் குறைப்பு**

பதிவு செய்த நாள் : ஜூலை 24,2011,21:15 IST

வடமதுரை : நெல் முதல், இரண்டாம் போகங்கள், செப்டம்பர் வரையில் சாகுபடி செய்யப்படும் கம்பு, சோளம், மக்காச்சோளம், கடலை, எள் ஆகிய பயிர்களுக்கு பயிர் காப்பீடு வழங்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் நெல் முதல் போகத்திற்கு செப்டம்பர் 2011 வரையும், இரண்டாம் போகத்தில் பிப்ரவரி 2012 வரையும், இதர பயிர்களுக்கு நவம்பர் 2011 வரையும் சேரலாம். பிரிமிய விகிதம் (அடைப்பிற்குள் கடன் பெறும் விவசாயிகளுக்கு): நெல் முதல் போகம்-

ரூ.153(169), நெல் இரண்டாம் போகம்-ரூ.75(83), கம்பு-ரூ.43(48), சோளம்-ரூ.19(21), மக்காச்சோளம்-ரூ.65(72), எள்-ரூ.40(44). ஆர்வமுள்ள விவசாயிகள் வேளாண் விரிவாக்க அலுவலர்களை அணுகலாம், என வடமதுரை வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**மானிய நிதித்திட்டம் பயிற்றுனர்களுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 24,2011,22:37 IST

கடலூர் : கடலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் பிற்படுத்தப்பட்ட பகுதிகளுக்கான மானிய நிதித்திட்டம் தொடர்பாக மாவட்ட அளவிலான பயிற்றுனர்களுக்கு பயிற்சி நடந்தது.மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் கலெக்டர் வீரராகவராவ் தலைமை தாங்கினார். உதவி திட்ட அலுவலர், மாநில ஊரக வளர்ச்சி நிறுவன ஆலோசகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பயிற்றுனர்கள், சுகாதாரத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பங்கேற்றனர். மேலும் வரும் 26ம் தேதி முதல் 29ம் தேதி வரையில் ஊராட்சி ஒன்றிய அளவில் மக்கள் நலப்பணியாளர்களுக்கு பயிற்சி நடக்கிறது.

தினகரன்

**தேயிலை தூள் தேக்கம்**

பதிவு செய்த நாள் : 7/25/2011 1:0:20

கருத்துகள்

கருத்துகளை தெரிவிக்க



குன்னூர் : குன்னூர் சிடிடிஏ ஏல மையத்தில் கடந்த வியாழன், வெள்ளி கிழமைகளில் ஏலம் நடந்தது. மொத்தம் 16.71 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இலை ரகம் 11.33 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.38 லட்சம் கிலோவும் அடங்கும். பாகிஸ்தான், ரஷ்யா வர்த்தகர்கள் குறைந்த அளவில் தேயிலை தூளை மட்டும் வாங்கினர். உள்நாட்டு வர்த்தகமும் களைகட்டவில்லை. இதனால் அனைத்து ரகத்திற்கும் கிலோவுக்கு ரூ.3 வரை விலை சரிந்தது. வர்த்தகம் களை கட்டாததால் 28 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.

இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ரூ.38 முதல் ரூ.40, உயர் வகை ரூ.80 முதல் ரூ.130, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.39 முதல் ரூ.45, உயர் வகை ரூ.85 முதல் ரூ.140 விற்பனை ஆனது. சிடிசி டஸ்ட் ரகத்திற்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.149, ஆர்தோடக்ஸ் ரகத்திற்கு ரூ.189ம் விலை கிடைத்தது.